## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 46/2019

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **12.02.2026** |
| **பெயர்** | **சரவணன்** |
| **த/பெ** | **துரைசாமி** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.09 பி.எம்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

10. இவ்வழக்கில் பிரதிவாதிகளை பாகப்பிரிவினை செய்யக் கோரி பல முறை அழைத்தும் அவர்கள் வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளபட்சத்தில் 1–ம் பிரதிவாதி வழக்கில் 2–ம் ஐட்டம் சொத்தில் வீடு கட்டியும் அதே 2–ம் ஐட்டம் சொத்தில் நாங்கள் தென்கிழக்கு பக்கத்தில் கோவில் கட்டியதற்கு முன்னர் அழைத்தோமா அல்லது அதற்கு பின்னர் அழைத்தோமா என்றால் முன்னரே அழைத்தோம். அப்படியென்றால் பாகப்பிரிவினைக்கு நான் அழைத்த பிறகு தான் 1–ம் பிரதிவாதி வழக்கில் 2–ம் ஐட்டம் சொத்தில் வீடு கட்டியும் அதே 2–ம் ஐட்டம் சொத்தில் நாங்கள் தென் கிழக்கு பக்கத்தில் கோவில் கட்டினோம் என்றால் சரிதான்.

11. எனவே என்னுடைய முந்தைய சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளது போல் நான் கட்டியுள்ள கோவில் வாதிகளாகிய எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் ஒரு ஒருமித்த உடன்பாடு ஏற்பட்ட பிறகு தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 3 ஆவணங்களில் (வாதியின் வக்காலத்து, வாதுரை மற்றும் பி.சா.ஆ1) உள்ள கையெழுத்தும் ஒன்று போல் தான் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ1 ஆவணத்தின் படி தான் எனக்கும் பிரதிவாதிக்கும் ஒருமித்த உடன்பாடு ஏற்பட்டது என்றால் பி.சா.ஆ1 ஆவணத்தை நான் இதுவரை பார்த்ததில்லை.

12. பி.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் தாயாருடையது என்றால் சரிதான். பி.சா.ஆ 1 ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளது யார் என்று தெரியுமா என்றால் 3–ம் சாட்சிய கையொப்பம் இட்டுள்ளது என்னுடைய தாய்மாமா சந்திரன். 1–ம் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளவர் யார் என்றால் சந்திரனுடன் வேலை பார்க்கும் பாஸ்கர் என்பவர். பி.சா.ஆ–1 ஆவணத்தில் என் தாயார், தாய்மாமா மற்றும் பாஸ்கர் என்பவர்கள் கையொப்பம் போட்டுள்ளதால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

13. பி.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று கூறும்பட்சத்தில் அதனை forensic துறைக்கு அனுப்பி வைக்க எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் ஆட்சேபணை இல்லை. 12.08.2019–ல் பிரதிவாதிகளுக்கு பாகப்பிரிவினை செய்து தரக்கோரி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியதாக என் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருக்கும்பட்சத்தில் அந்த அறிவிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வழக்கு சொத்தினை மட்டும் பாகப்பிரவினை செய்யக்கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா அல்லது என் தாயாரின் மற்றும் தந்தையாரின் மொத்த சொத்துக்களையும் சேர்த்து பாகப்பிரிவினை செய்யக்கோரி அனுப்பினேனா என்றால் கோவில் இடத்திற்கு மட்டும் தான் பாகப்பிரிவினை செய்யக் கோரி அனுப்பினேன். **(வாதி தரப்பு வழக்கறிஞர் இது பாகப்பிரிவினை வழக்கு அல்ல என்று ஆட்சேபணை தெரிவித்தார்).**

14. பாகப்பிரிவினை கோராமல் அந்த கோவிலை நான் கட்டியிருந்தால் அதில் 1–ம் பிரதிவாதிக்கும் உரிமை உள்ளதா என்றால் எல்லா சொத்துக்களிலும் 1/6 பங்கு தான் 1–ம் பிரதிவாதிக்கு உள்ளது. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தேதிக்கு முன்பு வரை என் தாயார் பெயரில் ஆயலச்சேரி கிராமத்தில் சர்வே எண் 86 என் தாயர் பெயரில் 2 ஏக்கர் 1 செண்ட் நிலம் உரிமையாக இருந்து வந்தது என்றால் சரிதான். 12.11.2019 தான் என் சகோரிகளான பிற வாதிகளுக்கு மேற்சொன்ன சொத்தினை திருத்தி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி காவல்நிலையத்தில் புகார் அளித்தன் பெயரில் நான் விசாரணைக்கு சென்றேனா என்றால் சென்றேன். என் தாயார் சொத்தினை செட்டில்மெண்ட் கொடுத்துவிட்டதாக 1–ம் பிரதிவாதி புகார் கொடுத்திருந்தார் அது குறித்து வாதிகளுக்கு எதுவும் தெரியாது என்றும் அந்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று கூறியபோது அவர்கள் உரிமையியல் நீதிமன்றத்தை நாடுமாறு கூறினார்கள். வழக்குசொத்தின் தெற்கு பக்கத்தில் கோவிலும்., கோவிலின் மேற்கு பக்கத்தில் ஷீட் அமைத்து அன்னதானமுன் செய்து வந்தோம்.

15. மேற்சொன் ஷெட் அமைத்ததற்கான ஆவணமோ அல்லது அன்னதானம் செய்ததற்கான ஆவனமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி கொடுத்த புகாரின் பெயரில் என் மீது சி.எஸ்.ஆர்–ம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என் மீது நிறைபுகார் கொடுத்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என் மீது பதிவு செய்யப்பட்ட சி.எஸ்.ஆர் என்றால் சரிதான். பி.சா.ஆ 1 ஆவணம் மூலம் முறையாக பாகப்பிரிவினை எற்பட்டு அதன் பெயரில் தான் 1ம்–பிரதிவாதி இரண்டாம் இன சொத்தின் காலி இடத்தை அனுபவித்து வருகிறார் அதனை வாதிகள் தொந்தரவு செய்ததால் தான் சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

16. அதனால் தான் என் பிரமாணவாக்குமூலத்தில் 16–ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளது போல் மேற்சொன்ன செட்டில்மெண்ட் ஆவணம் பொய்யான ஆவணம் என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதில் வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். மேற்சொன்ன பிரச்சனைகள் இருக்கும்பட்சத்தில் ஏன் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துளளேன் என்றால் குறிப்பிட்ட வழக்கு சொத்த இடத்தில் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததால் தான் உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரினேன். அப்படி இருக்கும்பட்சத்தில் பிற சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

17. ஏற்கனவே முறைப்படி பி.சா.ஆ1 கூர்சிட்டு படி பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டது என்றும் அதன்படி தான் பிரதிவாதி அவருடைய பாகமான 2–ம் அட்டவணை சொத்தினை அனுபவித்து கொண்டு வருகிறார் என்றும் அதனை தடுக்கும் எண்ணத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை வழக்கு தொடுத்திருந்தால் நான் அனுபவிக்கும் சொத்திலும் பிரதிவாதி பாகம் கோருவார்கள் என்ற காரணத்தினால் தான் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் எண்ணத்துடன் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி இருக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்டு அவரவர்களின் சொத்துக்களை அவர் அவர்கள் அனுபவித்து கொண்டு வரம் பட்சத்தில் 1–ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பி–அட்டவணை சொத்தில் அவர் அனுபவித்து கொண்டு வருவதை தடுக்கும் எண்ணத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

18. நான் கூறும் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் யாரும் அனுபவித்து கொண்டு வரவில்லை என்றும் பி.சா.ஆ–1 ஆவணத்தின்

அவரவர்கள் அனுபவித்து கொண்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் சகோதரிகளுக்கு மேற்சொன்னவாறு முறையாக பாகம் பிரித்து கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் என் தாயாரின் சொத்துக்களை பொருத்து மட்டும் தான் என் சகோதரிகளுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது என் தந்தையாரின் சொத்தில் எல்லோரக்கும் 1/6 பங்கு உள்ளது. பொதுவாக கிராமங்களில் தாயாரின் பெயரில் உள்ள சொத்துக்களை மகள்களுக்கும் தந்தையாரின் பெயரில் உள்ள சொத்துக்களை மகன்களுக்கும் எழுதி வைப்பது தான் வழக்கம் என்றால் அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப தான் சொத்துக்களை எழுதி வைப்பார்கள். பி.சா.ஆ 1 ஆவணத்தின் படி எல்லோருக்கும் அவரவர்கள் சொத்துக்கள் பிரித்த கொடுக்கப்பட்டுவிட்டது பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

19. உண்மையில் கூர்சிட்டின் படி பாகப்பிரிவினை நடந்ததால் தான் 15 வருடங்களுக்கு முன்னரே 1-ம் பிரதிவாதி பி-அட்டவணை சொத்தில் வீடு கட்டும் போது நாங்கள் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றும் அதே பி - அட்டவணை சொத்தின் தென் கிழக்கு பகுதியில் வாதிகளாகிய நாங்கள் கோவில் கட்டும் போது பிரதிவாதிகள் எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. பி-அட்டவணை சொத்து 1-ம் பிரதிவாதிக்கு உரிமையான சொத்து என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 04.24.**